மாலை முரசு

பக்கங்கள் 24+ 02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 09 வெள்ளிக்கிழமை 25.07.2024 | அதிர்வு 356

## யாழ்ப்பாணத்தில் நாளை தமிழ்த் தேசிய வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களை நினைவுகூரும் 42 ஆவது தமிழ்த் தேசிய வீரர்கள் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதி வேண்டி வடக்கு, கிழக்கில் நாளை பெரும் போராட்டம்

(எஸ்.கீதபொன்கலன்)

தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை மாபெரும் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

வடக்கு – கிழக்குச் சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் சமநேரத்தில் (காலை 10 மணிக்கு) இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மனித புதைகுழிப் பகுதியிலும், முல்லைத்தீவில் மாவட்ட செயலகத்துக்கு அரு 02



# சம்பந்தனின் மறைவு தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பு!

## அனுதாபப் பிரேரணை மீதான உரையில் சிறீதரன் தெரிவிப்பு

"எளிமையும், நேர்மையும், அறமும் சார்ந்த தூய அரசியல் செல்நெறியில் நெகிழ்வுகளினூடே கட்டிறுக்கத்தைக் கடைப்பிடித்த தலைமைத்துவ வழிகாட்டியாக வாழ்ந்த சம்பந்தன் ஐயாவின் மறைவு என்பது, ஈழத்தமிழினத்தின் இரு தலைமுறை அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகவும், அவரது அரசியல் தலைமையை 03



# இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தும் முயற்சி முறியடிப்பு

## ஆழியவளையில் இருந்து சென்ற படகு கடலூரில் மடக்கிப் பிடிப்பு இலங்கையர் இருவர் உட்பட ஐவர் இந்தியப் பொலிஸாரால் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளையில் இருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமாக படகில் சென்ற இருவர் கடலூர் கரையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் இருந்து கஞ்சாவைக் கடத்தி வரும் நோக்கில் படகில் சென்றுள்ளனர் என்று இந்தியப் பொலிஸாரின் விசாரணைகளில் 02



# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் ஒருவர் தூக்கிட்டுச் சாவு!

கிளிநொச்சி பொலிஸ் நிலைய விசாரணைக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் இன்று தூக்கிட்டு உயிரிழந்துள்ளார்

இவர், குடும்பப் பிரச்சனையை ஒட்டிய விசாரணைகளுக்காக இன்று பொலிஸாரால் அழைத்து வரப்பட்டிருந்தார்.

விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த நேரத்தில், தான் அணிந்திருந்த சட்டையின் ஒரு பகுதியைக் கிழித்து, விசாரணைக் கூண்டுக்குள் இன்று மதியம் 12.08 மணியளவில் தூக்குப் போட்டு உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழந்தவர் கிளிநொச்சி ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த இரத்தினம் ராசு (வயது 66) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று இந்தியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பெயரில் மேற்கொண்ட சோதனையின்போது கடலூர் கடற்கரையில் மூவர் கைது செய்யப்பட்டதுடன் 300 கிலோ கஞ்சாவும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

கைது செய்த மூவரிடமும் இந்தியப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் படகுக்கு வழங்கவே கஞ்சாவை மறைத்து வைத்திருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் கடலூர் கடற்கரையில் மறைந்திருந்த இந்தியப் பொலிஸார் யாழ். ஆழியவளையில் இருந்து சென்ற படகை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதன்போது படகில் இருந்த இரு இலங்கையரையும் இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவு கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர் சுரேன் குருசுவாமி தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, மூத்த போராளிகளான ஜெகன், தேவன், நடேசுதாசன் உட்பட 53 ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களையும் பொதுமக்களையும் அஞ்சலிக்கும் 42 ஆவது ஆண்டு நினைவேந்தலாக இது நடைபெறுகின்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம், விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.நவீந்திரா (வேந்தன்ஸ, சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமையிலும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாமையிலும், வவுனியாவில் புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையிலும், மன்னாரில் நகரப் பகுதியிலும், அம்பாறையில் திருக்கோ வில் பகுதியிலும், மட்டக்களப்பில் காந்திப் பூங்கா பகுதியிலும், திருகோணமலையில் சிவன் கோயில் முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளோம் என்று வடக்கு - கிழக்குச் சமூக இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக "மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவு" அமைப்பினர் கொழும்பு ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தின் முன்பாக நாளை காலை 10 மணியளவில் கவனவீர்ப்புப் போராடடத்தில் ஈடுபடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிருந்த எங்களுக்கு இனியொருபோதும் நிரப்பவே முடியாத அரசியல் வழிகாட்டியின் இழப்பாகவுமே நிகழ்ந்திருக்கின்றது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான அமரர் இராஜவரோதயம் சம்பந்தன் காலமாகி ஒருவருடம் நிரம்பியுள்ள சூழலிலும், அவரது மறைவினால் தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் ஏற்பட்ட இடைவெளியை உணர்ந்த ஒருவனாக, இந்தச் சபையில் அவரின் மறைவுக்கான ஆழ்ந்த துக்கத்தையும் மரியாதையுடனான இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் மக்களின் நீண்டகால இன விடுதலைப் பயணத்தில், அறம், அரசியல் நுண்ணறிவு, அனுபவம் என்பவற்றின் முழுமையான ஆளுமை வடிவமாகத் திகழ்ந்த சம்பந்தன் ஐயா, 1933 பெப்ரவரி 5ஆம் திகதி தமிழர்களின் தலைநகரான திருகோணமலையில் பிறந்து, தமது கல்வியை திருகோணமலையிலுள்ள புனித வளனார் தமிழ் பாடசாலையில் ஆரம்பித்து, யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரி, குருநாகல் புனித ஆன்ஸ் கல்லூரி, மொறட்டுவை புனித செபஸ்தியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயின்று, கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டக் கற்கையைப் பூர்த்தி செய்து, தனது தொழில்முறை வாழ்க்கையை சட்டவாளராக ஆரம்பித்த போதும், 23 வயது நிரம்பிய 1956 ஆம் ஆண்டிலேயே தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இணைந்து, தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப் பொருளாளர், உப தலைவர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட பதவிகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியையும் அலங்கரித்த தோடன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும், 2015 முதல் 2018 வரையான காலத்தில் இலங்கை நாடாளுமன்றத்தின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து, தமிழின விடுதலைப் போரியல் காலகட்டத்திலும், தமிழர்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்ட 2010 முதல் 2024 வரையான கடந்த 14 ஆண்டுகளிலும் சம்பந்தன் என்கின்ற அரசியல் பேராளுமை ஆற்றிய செயல்களின் கனதி மிகப் பெறுமதியானது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இணைந்து முழுமையாக இருபத்தொரு ஆண்டுகளின் பின்னர், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளு



மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம், தனது நேரடி அரசியல் பிரதிநிதித்துவத்தை ஐயா ஆரம்பித்திருந்தார்.

இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், தனிநாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும், 1983இன் இதே ஜுலை மாதத்தில், மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் சிங்களக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மூன்று மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் புறக்கணித்ததால் பதவியிழந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவராக சம்பந்தனும் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983 செப்டெம்பர் 7 இல் இழந்தார்.

அதன்பிற்பாடு, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர்.அருணாசலம் தங்கத்துரையின் மறைவின் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தின் அடிப்படையில், 1997 இல் மீளவும் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட சம்பந்தன், 2001.10.20ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகப் பதவியேற்ற அதே காலப்பகுதியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக 2004, 2010, 2015 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அத்தனை நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட அவரைத்தான், திருகோணமலை மாவட்ட மக்கள் தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனர்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால் தமிழினத்தின் அரசியல் தலைவராக அவரது பிரதிநிதித்துவம் மிகப்பெரியது. இலங்கையின் முன்னாள் அரசுத் தலைவர் ஜே. ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1984இல் நடைபெற்ற முதலாவது வட்டமேசை மாநாட்டிலும், 1985இல் நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தையிலும் தமிழர் பிரதிநிதியாகக் கலந்துகொண்டமை, ஈழத்தமிழர்களின் நிரந்தர அரசியல் தீர்வு குறித்து இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருடன் பல்வேறு சந்திப்புகளில் ஈடுபட்டமை, பாரதத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடனான பேச்சுவார்த்தைகளின் போது தமிழர் தரப்பு பிரதிநிதிகளில் ஒருவராக பங்கேற்றமை, இந்திய மற்றும் சர்வதேச இராஜதந்திரிகள் பலருடன் சந்திப்புகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டமை, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகள் தொடர்பிலும், மாகாண சபைகளுக்கான அதிகாரங்களின் பலவீனங்கள் குறித்தும் முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பப்பட்ட கடிதங்களை வரைவதில் முக்கிய பங்காற்றியமை உள்ளிட்ட விடயங்கள் அவரது அரசியல் வாழ்வின் மிக முக்கிய செயற்பாடுகள் எனலாம்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்பட்ட ‘பிராந்தியங்களின் ஒன்றியம்’ என்ற தீர்வுத் திட்ட வரைவினை வடிவமைப்பதில் அமரர் நீலன் திருச்செல்வத்துடன் சம்பந்தன் ஐயாவின் பங்கும் இருந்திருக்கிறது.

இவற்றுக்கு மேலாக 2010 – 2015 வரையான காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இலங்கையின் அரச தரப்புகளோடு நடைபெற்ற 14 பேச்சுவார்த்தைகளையும், மைத்திரிபால – ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலமான 2015 – 2019வரையான காலத்தில் நடைபெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தைகளையும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைவோடு சம்பந்தனே தலைமை தாங்கி நடத்தியிருக்கின்றார்.

விடுதலைப் போராட்ட மௌனிப்பின் பின்னர் திக்குத் தெரியாதிருந்த ஈழத்தமிழர்களின் அரசியல் ஆபத்பாந்தவனாக காலத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சம்பந்தனின் தலைமைத்துவ முதிர்ச்சிதான், இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுப் பயணத்துக்கு அடித்தளமிட்டிருந்தது.

அரசியல் வெறுமை சூழ்ந்த கடந்த 14 ஆண்டுகளை இராஜதந்திர ரீதியாக சரிவரக் கையாண்ட அரசியற் தலைவராகவும், அவரைப் பின்பற்றும் எங்களின் அரசியல் பயணத்துக்கான வழிவரைபடத்தை உருவாக்கித் தந்த ஒருவராகவும் சம்பந்தன் சாணக்கியம் மிக்க அரசியல் தலைவராக தனது பயணத்தில் வெற்றி கண்டிருந்தார் என்பதே உண்மை.

சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளால் மதிக்கப்பட்ட, ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்தும் தமிழினப் படுகொலைக்கான நீதி விசாரணை குறித்தும் ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக அணுகத்தக்க அரசியல் தலைவராகவும் சம்பந்தனே அடையாளம் பெற்றிருந்தார். அது அவரது அரசியல் அனுபவத்துக்கும், தலைமைத்துவ ஆளுமைக்கும், இனம் சார் அரசியலில் அவர் ஆற்றிய வகிபங்குக்கும் கிடைத்த அடையாளமே.

எளிமையும், நேர்மையும், அறமும் சார்ந்த தூய அரசியல் செல்நெறியில், நெகிழ்வுகளினூடே கட்டிறுக்கத்தைக் கடைப்பிடித்த தலைமைத்துவ வழிகாட்டியாக வாழ்ந்த சம்பந்தன் ஐயாவின் மறைவென்பது, ஈழத்தமிழினத்தின் இரு தலைமுறை அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகவும், அவரது அரசியல் தலைமையை ஏற்றிருந்த எங்களுக்கு இனியொருபோதும் நிரப்பவே முடியாத அரசியல் வழிகாட்டியின் இழப்பாகவுமே நிகழ்ந்திருக்கின்றது. இருந்தபோதும் அவரது தடங்களைப் பின்பற்றும் ஒருவனாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இருப்பை உறுதி செய்யவும், ஈழத்தமிழர்களது அரசியல் உரித்துக்கான தமிழ்த் தேசியப் பயணத்தில் எனக்கிருக்கும் தார்மீகப் பங்கை உறுதி செய்யவும், இதயசுத்தியோடு பணியாற்றுவேன் என்ற உறுதியோடு ஐயாவின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து, அவரது குடும்பத்தினருக்கான அனுதாபங்களையும் பகிர்ந்து நிறைவு செய்கின்றேன்.” – என்றார்.

# விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!



கொழும்பு, தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் கடந்த 18 ஆம் திகதி காலை நபர் ஒருவரைக் குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் இன்று காலை சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று அதிகாலை 4:30 மணியளவில், கெந்தல்லாவிட்ட, பஹலகம, கஹதுடுவ பகுதியில் உள்ள ஒரு கைவிடப்பட்ட வீட்டை பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் குழு ஆய்வு செய்ததனர்.

அங்கு மறைந்திருந்த சந்தேகநபர் விசேட அதிரடிப் படை அதிகாரிகளை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்த பதிலுக்கு விசேட அதிரடிப் படை அதிகாரிகளும் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர் பின்னர் உயிரிழந்துள்ளார்.



# முகாவில் இராஜகணபதி கோவில் மண்டபத்தில் ஆடிப்பிறப்பு விழா!







இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் வழிகாட்டுதலில் முகாவில் இராஜகணபதி ஆலயமும் அறநெறி பாடசாலையும் இணைந்து நடத்திய ஆடிப்பிறப்பு விழா முகாவில் இராஜகணபதி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

பாலமுருகன் அறநெறி பாடசாலை, மாசார் பிள்ளையார் அறநெறி பாடசாலை, மல்வில் கிருஷ்ணன் அறநெறி பாடசாலை, சித்தி விநாயகர் அறநெறி பாடசாலைகளின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் தலைமை பீடக் கிராம அலுவலர் முகாவில் கிராம அலுவலர் முகாவில் கிராம பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள், ஆலய நிர்வாகத்தினர், பெற்றோர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நழுவப் போகும் வாய்ப்பு

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, அத்தகைய மாற்றத்திற்கான நாடாளுமன்ற வலிமையை மக்கள் தாராளமாக வழங்கிய பின்னரும், அந்த அரசமைப்பு மாற்ற முயற்சியில் பின்னடித்து வருவது கண்கூடாகத் தெரிகின்றது.

அதிகாரத்துக்கு வர முன்னர் எதிரணியில் இருந்து தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்த சமயத்தில் அரசமைப்பு மாற்றம் குறித்து அதிகம் பேசிய தேசிய மக்கள் சக்தியினர், அதற்கான வலிமையை மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் தந்த பின்னரும் அதைச் செய்வதற்குப் பின்னடித்து வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்க வேண்டும், ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டும், அவற்றைச் செய்த பின்னர்தான் மூன்றாவது கட்டமாக அரசமைப்பு மாற்றம் என்று இந்த அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர் புதிய வியாக்கியானம் கூறத் தொடங்கி விட்டது.

இது, 'அலை ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் என்று கடற்கரையில் காத்திருப்பதற்கு ஒப்பான' விளக்கமாகும்.

கடந்த ஏப்ரலில் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, மாகாண சபைத் தேர்தல்களை நடத்திய பின்னர் அரசமைப்பு உருவாக்கமுயற்சி முன்னெடுக்கப்படும் என்று விளக்கம் கூறியிருந்தார்.

இப்போது போகின்ற போக்கில் பார்த்தால் மாகாண சபை தேர்தல் தற சமயத்திற்கு நடக்கும் என்று நம்பிக்கையே இல்லை. ஆக, அந்த தேர்தலும் நடக்காது, அதன் பின்னர் கொண்டு வரப்படும் எனக் கூறப்படுகின்ற புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியும் முன்னெடுக்கப்படாது என்றே தோன்றுகின்றது.

ஆனால், இப்போது புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கி இருக்கின்றன என்று அதே பிரதமர் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த பிரதமர், இந்த அரசின் ஆட்சி காலம் முடிவடைவதற்கு முன்னர் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கின்றார்.

எப்போதுமே ஓர் அரசாங்கம் நாட்டு மக்களின் ஆணையைப் பெற்று அதிகாரத்துக்கு - பதவிக்கு - வந்தவுடன் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியைத் தொடங்கி நிறைவேற்றுவதுதான் முறையானது. ஆட்சி அதிகாரத்தின் அந்தத்தில் - அடுத்த ஆட்சிக்கான ஆணையைப் பெறுவதற்கு பிற தரப்புகளும் போட்டிக்கு நிற்கின்ற காலகட்டத்தில் - புதிய அரசமைப்பை உருவாக்குவது என்பது பெரும்பாலும் வெற்றி அளிக்காது. அத்தோடு அது நியாயமானதும் அல்ல.

கைக்கு கிடைத்த நிறைவேற்றதிகாரத்தை முழுமையாக ஆண்டு, அனுபவித்து, ருசிப்பதற்காக நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தள்ளிப்போடுகின்றது தேசிய மக்கள்சக்தி என்பது வெளிப்படையாகத் தோற்றும் விடயம்.

இந்தப் பதவிக் காலத்தின் அந்தத்தில் புதிய அரசமைப்பை உருவாக்கும் திட்டத்தை இந்த அரசாங்கம் முன் நகர்த்தப் போகின்ற போது அதற்குரிய ஆதரவையும் வலிமையையும் செல்வாக்கையும் இந்த அரசு இழந்து விட்டிருக்கும்.

கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இந்த அரசமைப்பை மாற்றுவதற்கான முயற்சிகள் அப்படித்தான் பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்டு தோல்வியில் முடிவடைந்து இருக்கின்றன. இப்போது அந்த மாற்றத்திற்கான மக்கள் ஆணையும் நாடாளுமன்றப் பலமும் இந்த ஆட்சியாளர்களுக்குக் கிடைத்த பின்னரும், அதை உடனடியாக - உருப்படியாக -, நிறைவேற்றாமல், காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் அரசமைப்பு மாற்றத்துக்கான வாய்ப்பை இந்த ஆட்சி பீடமும் கைநழுவவிட்டு விடப் போகின்றது என்றே தோற்றுகின்றது.



# பிரான்ஸில் கறுப்பு ஜூலை நினைவேந்தலும் செம்மணிக்குக் கண்டனக் கவனவீர்ப்பும்!

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் இடம்பெற்ற தமிழின அழிப்பின் 42 ஆம் ஆண்டு நினைவு மற்றும் செம்மணி புதைகுழியைக் கண்டித்த கவனவீர்ப்பு நிகழ்வு என்பன நேற்று முன்தினம் (23) புதன்கிழமை பிரான்சில் பாரிஸ் நகரில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்ஸ் அரசியற்றுறை மற்றும் தமிழ் இளையோர் அமைப்பும் இணைந்த ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் செம்மணிப் புதைகுழியை இளையோர் தத்ரூபமாகக் கண்முன்னே காட்சிப்படுத்தி இருந்தமை அனைவரையும் உணர்வடையவைத்தது.

நினைவுரைகளும் இடம்பெற்றன. நினைவுரைகள் பிரெஞ்சு மற்றும் தமிழ் மொழிகளில் இடம்பெற்றன.

வெளிநாட்டவர்கள் பலரும் தமிழருக்கு நடந்த துன்பங்களைக் கேட்டறிந்து கொண்டனர். அவர்களுக்குப் பிரெஞ்சு மொழியிலான துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டன.





# சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலில் நீரிழிவுப் பரிசோதனை முன்னெடுப்பு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருதில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் அதனைக் கண்காணிக்கும் முகமாக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சாய்ந்தமருதில் மக்கள் கூடும் இடங்களான கடற்கரைப் பிரதேசம், சந்தை, பள்ளிவாசல்கள், பாடசாலைகள் போன்ற இடங்களுக்கு வருகைதரும் மக்களினுடைய சீனியின் அளவை கண்டறிவதற்காக எழுமாறாகக் கணக்கெடுப்பு இடம்பெற்று வருகின்றது.

அதில் ஓர் அங்கமாக நேற்று (24) வியாழக்கிழமை சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் லுஹர் தொழுகைக்காக வருகை தந்த மக்கள் அனைவருக்கும் நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் கலந்துகொண்டனர்.







# திருமலையில் போதியளவிலான மேய்ச்சல் நிலம் இல்லாமை தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் போதியளவிலான மேய்ச்சல் நிலம் இல்லாததால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்துச் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நேற்று (24) திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம் ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் போதியளவிலான மேய்ச்சல் நிலம் இல்லாததால், கறவை மாடுகளுக்கு உணவளிப்பதில் கால்நடை உரிமையாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் இங்கு முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது குறித்த பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், கால் நடை மிருக வைத்தியர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# காலநிலை சீர்கேட்டால் பாரிய மரங்கள் சரிவு!

(மஸ்கெலியா )

நோர்வூட் நிவ்வெளி பகுதியில் பிரதான வீதியில் நேற்று அதிகாலை வேளையில் வீதி ஓரத்தில் இருந்த பாரிய மரம் ஒன்று சாய்ந்ததால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மற்றும் நிவ்வெளி தோட்ட மக்கள் சாய்ந்த மரத்தை வெட்டி அகற்றினர். அதனை தொடர்ந்து மஸ்கெலியா ஹட்டன் போக்குவரத்து சீர் செய்யபட்டது.

கடந்த ஒரு சில நாள்களுக்குள் அந்தப் பகுதியில் சுமார் ஐந்து மரங்கள் சாய்ந்து வீழ்ந்த நிலையில் போக்குவரத்து நடவடிக்கைகள் துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிவ்வெளி தோட்ட அதிகாரி மற்றும் நோர்வூட் பிரதேச வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன் வந்து அப் பகுதியில் உள்ள ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தின் ஒன்று கூடல்!

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய பெற்றோர் மற்றும் பழைய மாணவர் ஒன்றுகூடலும் பழைய மாணவர் சங்கத்துக்கு நிர்வாகத்தினர் தெரிவும் நாளை மறுதினம் (27) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோரை வருகை தருமாறு அதிபர் அறிவித்துள்ளார்.


# மேல்கொத்மலை நீர்தேக்க வான் கதவு ஒன்று திறப்பு!

(பொகவந்தலாவ எஷ்.சதீஷ்)

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு நேற்று அதிகாலை திறக்கப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் கொத்மலை நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்தால் நீர்த்தேக்கத்தின் ஏனைய வான் கதவுகளும் தானாகவே திறக்கப்படும் என்பதால், நீர்த்தேக்க அணையின் கீழ் கொத்மலை ஓயாவின் இருபுறமும் வசிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக செண்கிளேயார் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சம்மாந்துறை 'டிப்போ'வை இயங்குவதற்காக விரைந்து ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை



(கே. எ. ஹமீட் )

சம்மாந்துறை 'டிப்போ'வை மீண்டும் இயங்குவதற்காக விரைந்து ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை முன்வைத்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்ன நாயக்கதலைமையில்நாடாளுமன்றில் நடைபெற்ற அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அம்பாறை, மொனராகலை மாவட்ட மக்கள் கொழும்புக்கு வருவதற்கு மத்தளை அதிவேக நெடுஞ்சாலை ஊடாகப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வருமானமும் கிடைத்து வருகின்றன. எனவே அம்பாறை, மொனராகலை, மட்டக்களப்பு மக்களும் நன்மை பெறக்கூடிய வகையில் மத்தளை அதிவேக நெடுஞ்சாலையைப் பொத்துவில் ஊடாக கல்முனை வரை நீடிப்பதற்கான அபிவிருத்தித் திட்டத்தை நெடுஞ்சாலைகள் அமைச்சு அடுத்த வருடத்திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனால் குருநாகல், தம்புள்ள அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டம் நிறைவு பெறும்வரை கிழக்கு மாகாண மக்கள் நன்மை பெற முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்மாந்துறை பிரதேசத்தில் இயங்கி வந்த இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவை 2021 ஆம் ஆண்டு கடந்த அரசின் காலத்தில் தற்காலிகமாக கல்முனை டிப்போவோடு இணைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் அதிக சனத்தொகை வாழும் பிரதேசமான சம்மாந்துறை பிரதேசத்தின் இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவை மீண்டும் சம்மாந்துறை பிரதேசத்துக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சம்மாந்துறை இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவுக்கான காணி ஒதுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்ட நிலையில் சம்மாந்துறை டிப்போ கல்முனை டிப்போவுடன் கடந்த அரசால் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரும், போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருக்கும் இந்த முக்கியமான ஆலோசனைக் கூட்டத்தில் சம்மாந்துறை பிரதேச மக்களின் நலன்கருதி தற்காலிகமாக கல்முனை டிப்போவோடு இணைக்கப்பட்ட சம்மாந்துறை டிப்போவை மீண்டும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தீகவாபி, இறக்காமம் – முகையதீன் கிராமங்களுக்கான வீதிகள் தொடர்பாக அமைச்சர் பணிப்புரைகள் வழங்கியும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. தீகவாபி கிராம மக்கள் தங்களின் நாளாந்த வேலைகளை முடிப்பதற்கு நீண்டநேரம் பிரயாணம் செய்து அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், பிரதேச சபை உட்பட பல அலுவலகங்களுக்குச் சென்று தங்களின் வேலைகளை முடிக்க வேண்டியுள்ளது.

தீகவாபி – ஹிரா வீதி புனரமைக்கப்பட்டால் , தீகவாபி பிரதேச மக்கள் அட்டாளைச்சேனை பிரதேசத்துக்குக் குறுகிய நேரத்தில் பயணிக்க முடியும்.

ஆனால் தீகவாபி – ஹிரா கிராம வீதி புனரமைக்கப்படாததால் தீகவாபியிலிருந்து 15 கிலோ தூரம் சுற்றி பிரயாணம் செய்து அட்டாளைச் சேனை பிரதேசத்துக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதிகள் தொடர்பாக அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டும் இதுவரையும் தீகவாபி – ஹிரா கிராமம், இறக்காமம் – முகையதீன் கிராம வீதிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. எனவே, இது தொடர்பாக விஷேட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையின் கோரிக்கைக்கு பதிலளித்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா, மத்தளை அதிவேக நெடுஞ்சாலை வீதியிலிருந்து கல்முனை வரை விஸ்த்தரிக்கின்ற பணிகள் தொடர்பாக எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

சம்மாந்துறை போக்குவரத்து சபையின் டிப்போவை மீண்டும் சம்மாந்துறையில் இயங்க வைப்பதற்கான அறிக்கையை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவரைச் சமர்ப்பிக்க வேண்டும்.

தீகவாபி – ஹிரா கிராமம், இறக்காமம் – முகையதீன் கிராமங்களின் வீதி புனரமைப்பு தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக் முடியும்.– என்றார்.

# 12 உணவங்களுக்கு எதிராக கிண்ணியாவில் வழக்கு தாக்கல்

(எச்.எம்.ஹலால்தீன்)

கிண்ணியாவில் ஹோட்டல் ஒன்றில் உணவு உட்கொண்ட நிலையில் ஒவ்வாமை ஏற்பட்ட நிலையில் 12 உணவகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் இவ் உணவகங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கிண்ணியா சுகாதார வைத்திகாரி ஏ.எம்.எம்.அஜீத் தெரிவித்தார்.

உணவு ஒவ்வாமை காரணமாக கடந்த 23 ஆம் திகதி ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எ.எம்.எம்.அஜித் தலைமையிலான குழுவினர் உணவகங்களை விசேட பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் வைத்திருந்தவர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக 20 குற்றச்சாட்டியின் கீழ் 12 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.



இதேவேளை, இரண்டு உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகளுக்கு முக்கிய பங்கு வகித்த பிராந்திய சுகாதார சேவைகள பணிப்பாளர், மாவட்ட பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.







### பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி

# வருமானம் தரும் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்குக் கூடுதலான நிதி!

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழான பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்கள் வருமானத்தைப் பெற்றுத் தரும் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலையில் அவர்களுக்கு கூடுதலான நிதியை ஒதுக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போதே ஆளுநர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மகளிர் விவகார அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், தொழிற்றுறை திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என ஒவ்வொரு திணைக்களத்தினதும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழான பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்கள் வருமானத்தைப் பெற்றுத்தரும் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலையில் அவர்களுக்கு கூடுதலான நிதியை ஒதுக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தாத அபிவிருத்தியால் எந்தவொரு பயனுமில்லை எனக் குறிப்பிட்ட ஆளுநர், திட்டங்களைத் தயாரிக்கும் போது மக்களுக்கான நலன் என்ன என்பதைச் சிந்தித்தே உருவாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை ஆகியோரும், சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் செல்வி அகல்யா செகராஜா, தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி செ.வனஜா, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் ந.திருலிங்கநாதன், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் திருமதி பா.அபிராமி கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும் கலந்துகொண்டனர்.











# திருக்கோவில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ தீர்த்தோற்சவம் நேற்று (24) வியாழக்கிழமை சமுத்திரத்தில் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தத் தீர்தோற்சவம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகம கேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குச நாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

தீர்த்த தினத்தன்று முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும் முக்கியமான கிரியை அங்கு நடைபெறுவது வழமையாகும்.

இன்று வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழாவில் வள்ளி திருமணமும் நாளை வைரவர் பூசையும் இடம்பெறும்.




# விசேடதேவையுடையோர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் நடைமுறைமைகளை இலகுபடுத்துங்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை




விசேட தேவையுடையோருக்குச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை இலகுபடுத்துமாறு இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்,

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்,

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கவந்துகொண்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது,

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன்னர் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். வாகனங்களைச் செலுத்தக் கூடிய விசேடதேவையுடையோர் மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டாலும் செய்முறை பரீட்சையின்போது மோட்டார் போக்குவரத்து பரிசோதகரால் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

எனவே இந்த முறைமை இலகுபடுத் தப்படல் வேண்டும். விசேடதேவையுடையோருக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இணைத்தலைவர் என்றவகையில் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான பிரத்தியேகமான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும். குறிப்பாக வவுனியா யாழ். வீதியில் பயணிக்கின்ற பஸ்கள் மாணவர்களை ஏற்றுச்செல்வதில்லை. இதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கின்றார்கள்.

வவுனியா நகரில் பொது மக்களுக்கு ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதுடன் பாதுகாப்பான போக்குவரத்தை ஏற்படுத்தும் முகமாக வீதிச்சமிச்சை விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே முன்மொழிவு சமரப்பிக்கப்பட்டுள்ளது. இதனை விரைவாக நடைமுறைப்படுத்துங்கள்.

அத்துடன் பிரதான வீதிகளில் இரவு நேரங்களில் கால்நடைகள் படுத்திருப்பதால் அதிகம் வீதி விபத்துக்கள் நடைபெறுகின்றன. விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக இரவு நேரத்தில் ஒளிரக்கூடிய லுமினஸ் காதுப்பட்டிகளை கால்நடைகளுக்குப் பொருத்துவதன்மூலம் சாரதிகளை விளிப்படைய செய்வதன் மூலம் விபத்துக்ளை குறைக்கமுடியும். ஆகவே இதற்கான நடவடிக்கை எடுங்கள். - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய திணைக்களங்களுக்கு பணிப்புரைவழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதன்போது உறுதியளித்தார்.





# மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று

(வாலகிருஸ்ணா)

இராமபிரானால் வழிபட்ட பெருமையைக் கொண்ட கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று நண்பகல்பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ நடைபெற்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட இந்த ஆலயம் இலங்கையில் மிகவும் உயரமான திராவிட முகப்புத்திர சிற்ப மகாரதம் கொண்ட ஆலயமாகவும் சிறப்புபெற்று விளங்குகின்றது.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இரத்தினபுரன சுதாகர குருக்கள் தலைமையில் திருவிழா நடைபெற்றது.

நேற்றுக் காலை விநாயகர் மற்றும் கொடித்தம்பத்துக்கு விசேட பூஜைகள் நடைபெற்று திருப்பொற்சுண்ணம் இடிக்கும் நிகழ்வு நடைபெற்றது.



அதனை தொடர்ந்து வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா நடைபெற்றது.

வெளிவீதியில் எருது வாகனத்தில் தீர்த்தக்கரையில் எழுந்தருளி அங்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பிரமகர்த்தி தோசம் நீங்கப்பெற்ற ஆலயம் என்ற சிறப்பைக் கொண்ட ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்தோற்சவம் வெகுவிமர்சையாக நடைபெற்றுது.

தீர்த்தோற்சவத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.இதன்போது தந்தையை இழந்தவர் கள் பிதிர்க்கடன் செலுத்தி தமது தோசங் களை நிவர்த்தி செய்தனர்.





# அக்கரைப்பற்று அல்-பாயிஷா வித்தி. மாணவத் தலைவர்களுக்குப் பயிற்சி

**(றிஸ்வான் சாலிஹு)**

அக்கரைப்பற்று அல்- பாயிஷா மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிச் செயலமர்வு, பாடசாலையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் பாடசாலையின் ஆராதனை மண்டபத்தில் அதிபர் எம்.கே.சியாத் தலைமையில் நடைபெற்றது.

வினைத்திறனான ஆளுமைமிக்க மாணவ தலைவர்களைப் பாடசாலையிலும் சமூகத்திலும் உருவாக்கும் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

ஐகோனிக் யூத்ஸ் அமைப்பின் தவிசாளரும், வழிகாட்டல் ஆலோசகருமான சிமாம் முஸ்தாக் வளவாளராக கலந்து கொண்டு மாணவ தலைவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள், தலைமைத்துவம் மற்றும் போதைவஸ்து பாவனையற்ற இளைஞர்களை எவ்வாறு உருவாக்குவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

இந்தச் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவ தலைவர்களுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.



# எருமை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கல்கமுவவில் விபத்து!

**(உடப்பு க.மகாதேவன்)**

பாதெனிய, அனுராதபுரம் வீதியில் கல்கமுவ மீகஸ் சந்தியில் எருமை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லொறியில் ஏற்றிச் சென்ற எருமை மாடுகளுக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் வாகனமும் பாரிய சேதத்துக்குள்ளாகியுள்ளது. மேலும் அருகில் இருந்த தெருவோரக் கடைக்கும் சேதமேற்பட்டுள்ளது.

விசாரணைகளை அனுராதபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நேர்முகத் தேர்வு!

(நவாஸ்)

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாது காப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் தலைமையில் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நேர்முகத் தேர்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் 20 லட்சம் குடும்பங்களை வலுவூட்டும் “நெக்ஸ்ற் ஸ்ரீலங்கா” அரசின் திட்டத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் 18 வயது முதல் 35 எதுவரையான 50,000 இளைஞர் யுவதிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் ஒன்றை மேற்கொள்வதற்குத் தொழில் பயிற்சியை பூரண புலமைப் பரிசிலுடன் வழங்கும் திட்டம் சம்மந்தமாக அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சமுர்த்தி வளவாளர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர் கெ.எம்.முகமட் றிஸ்வி மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் கெ. ஜீவகுமார், த.சிவனேசன், எம். கே. எம். ஹனிபா, எஸ். எச் எம். இர்பான் மௌலானா, எஸ் எம். பஸ்லின், எஸ். பார்த்திபன், என். அருளானந்தம் மற்றும் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர.





# வருமானம் குறைந்த குடும்பத்துக்கு சுவிஸ் உதயம் அமைப்பின் நிரந்தர வீடு!

(எம்.ஏ.றமீஸ்)

சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளரும் பிரபல தொழிலதிபருமான கே.துரைநாயகத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவரது சொந்த நிதி மூலம் வாகரை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அம்மந்தனாவெளி பகுதியில் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று, துரைநாயகம் – நிதிவதனி தம்பதியர் மூலம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டது.



நீண்ட காலமாகத் தற்காலிக ஓலைக் கொட்டிலில் வசித்து வந்த ஆறு பேரைக் கொண்ட இந்தக் குடும்பத்தில் நான்கு பேர் பாடசாலை மாணவர்கள் ஆவர். இந்தக் குடும்பத்தவருக்கு நிரந்தர வீட்டுடன் குடி தண்ணீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டினை கையளிக்கும் நிகழ்வின் போது இலங்கைக்கான சுவிஸ் உதயம் அமைப்பின் தலைவர் எம். விமலநாதன், செயலாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன், பொருளாளர் எம். கருஸ்ராஜ், உப தலைவர் க.வரதராஜன், உப செயலாளர் நடன சபேசன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.








# ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான உடைந்த தூண்களை மாற்ற அறிவுறுத்து!

சாவகச்சேரி, நுணாவில் சந்தியில் இருந்து கனகன்புளியடி சந்திக்கு செல்லும் பருத்தித்துறை வீதியில் தொலைத் தொடர்பு நிறுவனத்துக்குச் சொந்தமான பல சிமெந்து தூண்கள் உடைந்து சேதமடைந்து காணப்படுகிறது.

வட்டார உறுப்பினர் மு. கோகுலன் கொடுத்த அறிவித்தலை அடுத்து சபையின் தவிசாளர் வ.ஶ்ரீபிரகாஸ் சேதமடைந்து காணப்படும் தூண்களை உடனடியாக மாற்றுமாறு நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார்.

# கணித, விஞ்ஞான நெறியைப் பயிலும் ஆசிரியர்களது உபகரணக் கண்காட்சி!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித, விஞ்ஞான நெறி பயிலும் ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டிலான கற்பித்தல் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் கலந்து கொண்டார்.

கணித, விஞ்ஞான உபகரணங்கள் காட்சிப்படுத்தலை ஏனைய பிரிவு ஆசிரிய மாணவர்களும் கலாசாலையை அண்டிய பகுதிகளில் உள்ள அயல் பாடசாலைகளின் மாணவர்களும் பார்வையிட்டனர்.












# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் 331 ஆவது மலர் இன்று வெளியீடு!

## உதவித் திட்டங்களும் வழங்கி வைப்பு

வடமராட்சி, தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், சந்நிதியான் ஆச்சிர மத்தின் ஞானச்சுடர் 331 ஆவது மலர் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள் ளது.

இன்று (25) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற ஞானச்சுடர் ஆடி மாத 331 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட் டுரையினை செல்வி தயாளினி குமாரசாமியும், மதிப்பீட்டுரையை சைவப்புலவர்,ஆசிரியர் திருமதி சசிலேகா ஜெயராஜனும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

உதவித் திட்டங்களாக, 97,000 ரூபா பெறுமதியான 02 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பளை, மாவிட்டபுரம் பகு தியை சேர்ந்த யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவி, கரவெட்டி கிழக்கு பகுதியை சேர்ந்த கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 08 இல் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கே சைக்கிள்கள் வழங் கப்பட்டன.













# யாழ். மாவட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் இணைய பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இணையத்தின் தலைவர் திருமதி சிவராஜா மரிய றோசரி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் கலந்து கொண்டார்.

யாழ். மாவட்டத்தில் 150 இற்கு மேற்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்குகின்ற நிலையில் வினைத்திறனாக சிறப்பான சேவைகளை வழங்கும் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு சிறந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான தெரிவில், சுழிபுரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் முதலிடத்தையும் ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இரண்டாமிடத்தையும் வல்வை வடகிழக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம் மூன்றாவது இடத்தையும் பெற்ற நிலையில் அந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவிகளுக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார்.

இணையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவர் திருமதி மகேந்திரன் நிர்மலாதேவி, செயலாளர் வசீகரன் துளசிமலர், பொருளாளர் திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் , உப தலைவர் கௌசல்யா, உப செயலாளர் பக்ஷா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் கே. சிவகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.







# துணுக்காய், மாந்தை கிழக்கு, வலி. கிழக்கு சபைகள் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு!

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச சபைகளின் தவிசாளர்களும், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளரும் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (24) சந்தித்துக் கலந்துரையாடினர்.

துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் க.செந்தூரன், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி இராசையா நளினி ஆகியோருடன் சபையின் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

தமது பிரதேசங்களில் பல்வேறு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் ஒதுக்கப்படும் நிதி போதாது என்று இதன்போது குறிப்பிட்டனர்.

சபையின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அவசியத்தையும் ஆளுநரிடம் வலியுறுத்தினர்.

மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை, கமநலசேவைத் திணைக்களத்தின் சிறிய குளங்கள் கைவிடப்படுகின்ற விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர்.

இதன் பின்னர் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் மற்றும் சபையின் செயலாளர் உள்ளடங்கலாக உறுப்பினர்கள் ஆளுநரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு உரிய ஆளணி நியமனம் தொடர்பில் விசேட கரிசனை செலுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை மனுவையும் கையளித்தனர்.

சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுச் செயற்பாட்டுக்கு தொல்லியல் திணைக்களத்தால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்தினர். முன்பள்ளி கல்வியை ஊக்குவிக்க சபை நடவடிக்கை எடுக்கும் நிலையில் புதிய ஆளணியை உருவாக்கித் தருமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

சபைத் தவிசாளர்களின் கோரிக்கைகளில் நிறைவேற்றக்கூடியவற்றை விரைவாக நிறைவேற்றித் தருவதாக ஆளுநர் பதிலளித்தார்.

அத்துடன் மக்களின் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சி பேதமின்றி பணியாற்ற வேண்டும் எனவும், வாக்களித்த மக்களை மக்களாகப் பார்க்குமாறும் கட்சி உள்ளிட்ட எந்தவொரு வேறுபாடும் அவர்களிடம் காட்ட வேண்டாம் எனவும் ஆளுநர் கோரிக்கை முன்வைத்தார்.









# காரைதீவு பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இன்று தீ மிதிப்பு!

**(வடிவேல் டினேஸ் )**

வரலாற்றுச் சிறப்புமிக்க கிழக்கிலங்கை காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 16 ஆம் திகதி அம்மன் திருக்கதவு திறந்தவுடன் ஆரம்பமா னது.

தொடர்ந்து பூசைகள் , சடங்குகள் என்பன இடம் பெற்று நேற்று (24) இரவு தீ குழி வெட்டப்பட்டு பூசைகள் இடம் பெற்று தீ மூட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்று 25 காலை பறை ஓசை வானம் பிளக்க வங்கக்கடல் தீர்த்தம் எடுத்தலுடன் இடம் பெற்ற மஞ்சள் குளிக்கும் நிகழ்வை அடுத்து ஆலய வளாகத்தில் பக்தி பூர்வமான தீ மிதிப்பு வைபவம் இடம் பெற்றது. இதன் போது பல நூற்றுகணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.









# வைகோ உட்பட 6 எம்.பிக்கள் ஓய்வு; புதிய எம்.பி.க்கள் இன்று பதவியேற்பு



தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தி.மு.கவை சேர்ந்த சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பாமக தலைவர் அன்புமணி, அ.தி.மு.கவை சேர்ந்த சந்திரசேகரன் ஆகிய 6 எம்.பிக்களின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

அவர்களுக்கு மாநிலங்களவையில் நேற்று வழியனுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கடைசி நாளில் அன்புமணி மட்டும் அவைக்கு செல்லவில்லை. ஓய்வு பெறும் எம்.பிக்கள் குறித்து மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் கருத்து தெரிவிக்கையில்,

"அனல் பறக்கும் பேச்சால் அனைவரையும் ஈர்த்த வைகோ ஓய்வு பெற்றுள்ளார். கடந்த 1978, 1984, 1990 என 3 முறை இந்த அவைக்கு தேர்வு செய்யப்பட்ட அவர், கடந்த 2019 ஆம் ஆண்டில் மீண்டும் மாநிலங்களவை எம்.பியானார். இந்த அவைக்கு அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி உள்ளார். வைகோ உட்பட 6 எம்.பிக்களும் மாநிலங்களவைக்கு சிறந்த பங்களிப்புகளை வழங்கி உள்ளனர். அவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா கூறும்போது, "ஓய்வு பெறும் 6 எம்பிக்களும் ஜனநாயகத்தை வலுப்படுத்த தங்களின் சிறந்த பங்களிப்பை வழங்கினர்." என்று தெரிவித்தார்.

பதவி நிறைவடைந்த 6 எம்.பிக்களில் தி.மு.கவை சேர்ந்த வில்சன் மீண்டும் மாநிலங்களவை எம்.பியாக தேர்வு செய்யப்பட்டு உள்ளார். மேலும் தமிழகத்தில் இருந்து தி.மு.கவை சேர்ந்த கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம், அதிமுகவை சேர்ந்த இன்பதுரை, தனபால், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். புதிதாக தேர்வு செய்யப்பட்ட 6 எம்.பிக்களும் மாநிலங்களவையில் இன்று பதவியேற்றனர்.

# மாநிலங்கள் அவை எம்.பியாக தமிழில் பதவியேற்றார் கமல்ஹாசன்



நடிகரும் மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன், இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்கள் அவையின் உறுப்பினராக பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு (ராஜ்ய சபை) தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க.வைச் சேர்ந்த சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், அண்ணா தி.மு.க.வின் சந்திரசேகரன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ ஆகிய 6 பேரின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

இந்த நிலையில், வெற்றிடங்களுக்கான தேர்தல் முன்னதாக கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது.

அதில் தி.மு.க., அண்ணா தி.மு.க. சார்பில் முன்னுறுத்தப்பட்ட 6 வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வாகினர்.

இதில் திமுக கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசனும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன்படி, இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. மாநிலங்கள் அவை கூடியதும், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி ஏற்க அழைக்கப்பட்டனர்.

இதனையடுத்து கமல்ஹாசன் மாநிலங்கள் அவை உறுப்பினராக தமிழில் பதவி ஏற்றுக்கொண்ட நிலையில், அவருக்கு ராஜ்யசபை தலைவர் ஹர்வன்ஷ் பதவி பிரமாணம் செய்து வைத்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பதவியேற்றுக் கொண்ட கமல்ஹாசன் உறுப்பினர் பதவியேற்பு ஆவணங்களில் கையெழுத்திட்டார்.



# இமாச்சலில் பஸ் கவிழ்ந்து விபத்து; 8 பேர் உயிரிழப்பு

இமாச்சலில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழுந்தனர்.

இமாச்சல பிரதேசத்தின் மண்டி மாவட்டம், சர்காகாட் என்ற இடத்தில் இருந்து துர்காபூர் நோக்கி மாநில அரச பஸ் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. இதில் சாரதி, நடத்துநர் உட்பட மொத்தம் 29 பேர் இருந்தனர்.

இந்நிலையில் சர்காகாட் அருகில் இப்பேருந்து கட்டுப்பாட்டை இழந்து சுமார் 100 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் 4 பெண்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 21 பேர் காயம் அடைந்தனர்.

இவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பிலாஸ்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை துணை முதல்வர் முகேஷ் அக்னிஹோத்ரி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

# கர்நாடக வாக்காளர் பட்டியல் போல பிஹாரிலும் முறைகேடு நடக்கிறது

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு




கர்நாடகாவில் ஒரு மக்களவை தொகுதியில் வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்ததற்கான 100 வீத ஆதாரம் உள்ளது என்று ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

பிஹாரில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி நடைபெறுகிறது. இதில் இதுவரை 52 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இதுகுறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“கர்நாடகாவில் மக்களவைத் தேர்தல் முடிந்த பிறகு, ஒரு தொகுதியில் உள்ள வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்தோம். அங்கு ஆயிரக் கணக்கில் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வயது 45, 50, 60, 65 ஆக உள்ளது. அதேநேரம் 18 வயதுக்கு மேற்பட்ட பல வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இத்தகைய முறைகேடுக்கு எங்களிடம் 100 வீதம் ஆதாரம் உள்ளது.

இதுபோல பிஹாரில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி என்ற பெயரில் முறைகேடு நடக்கிறது. தேர்தல் ஆணையம் தனது பணியை சரியாக செய்யவில்லை.

இந்த பிரச்சினையிலிருந்து தப்பித்து விடலாம் என தேர்தல் ஆணைய அதிகாரிகள் கருதுகின்றனர். இதன் மூலம் அவர்கள் தவறுசெய்கிறார்கள். ஆனால் நாங்கள் இந்த விவகாரம் தொடர்பாக ஆதாரத்துடன் உங்களை அணுகுவோம். மக்கள் மத்தியிலும் எடுத்துச் சொல்வோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் பயணிகள் விமானம் தீப்பிடித்ததில் 49 பேர் உயிரிழப்பு






ரஷ்யாவில் சிறிய ரக பயணிகள் விமானம் நேற்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 49 பேரும் உயிரிழந்தனர்.

சைபீரியாவில் இருந்து இயக்கப்படும் ரஷ்யாவின் அங்காரா ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஏ.என் -24 ரக பயணிகள் விமானம், ரஷ்யாவின் பிளாகோ வெஷ்சென்ஸ்க் நகரிலிருந்து, ரஷ்யாவின் அமுர் பகுதியில் உள்ள டிண்டா நகருக்கு நேற்று புறப்பட்டது. இதில் 5 குழந்தைகள் உட்பட 43 பயணிகளும், 6 விமான ஊழியர்களும் பயணம் செய்தனர்.

டிண்டா நகரை நோக்கி சென்ற விமானம் திடீரென விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையின் ரேடாரில் இருந்து மறைந்து, தொடர்பு துண்டானது. இதையடுத்து அந்த விமானத்தை தேடும் பணியில் மீட்பு ஹெலிகாப்டர்கள் ஈடுபட்டன. அப்போது டிண்டா நகரிலிருந்து 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அமுர் வனப்பகுதிக்குள் விமானம் விழுந்து தீப்பிடித்துக் கொண்டிருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து மீட்பு குழுவினர் அங்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். விமானத்தில் பயணம் செய்த 49 பேரும் இறந்து விட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து மன்னர் சார்ளஸ்சுக்கு மரக்கன்றைப் பரிசளித்தார் மோடி





இங்கிலாந்துக்கு 2 நாள் உத்தியோக பூர்வ பயணமாக சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு மன்னர் 3 ஆம் சார்ளஸை சந்தித்தார். அப்போது மன்னர் சார்லஸ/க்கு மரக்கன்று ஒன்றை பிரதமர் மோடி பரிசளித்தார்.

முன்னதாக, நேற்று வியாக்கிழமை இங்கிலாந்து பிரதமர் கியர் ஸ்டார்மெரை சந்தித்தார் பிரதமர் மோடி. அந்த சந்திப்பின் போது அவர்கள் முன்னிலையில், இந்தியா – இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதையடுத்து மன்னர் சார்ளஸை சந்தித்தார். இந்த சந்திப்பு மன்னரின் அதிகாரப்பூர்வ வசிப்பிடங்களில் ஒன்றான சாண்ட்ரிங்ஹாம் ஹவுஸில் நடைபெற்றது.

அப்போது மன்னர் சார்ளஸ்சுக்கு பிரதமர் மோடி ‘சோனோமோ’ மரக்கன்று ஒன்றை பரிசாக வழங்கினார். விரைவில் இந்த மரக்கன்றை மன்னர் சார்ளஸ் நடவு செய்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இங்கிலாந்து அரச குடும்பத்தின் சமூக வலைதள பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“சாண்ட்ரிங்ஹாம் ஹவுஸில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை மன்னர் வரவேற்றார். அப்போது பிரதமர் மோடியின் சுற்றுச்சூழல் இயக்க முயற்சியான ‘தாயின் பெயரில் ஒரு மரம்’ இயக்கத்தின் அடையாளமாக மன்னர் சார்ளஸ்சுக்கு மரக்கன்று பரிசாக வழங்கப்பட்டது. அன்னையை போற்றும் வகையில் இந்த மரம் நடும் இயக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது” என சமூக வலைதள பதிவில் அரச குடும்பம் தெரிவித்துள்ளது.

“மன்னர் சார்ளஸ் உடனான இந்த சந்திப்பு அருமையானது. இந்தியா – இங்கிலாந்து இடையிலான உறவு குறித்து விவாதித்தோம். கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு தலைப்புகளின் கீழ் பேசினோம். ‘தாயின் பெயரில் ஒரு மரம்’ இயக்கத்தில் மன்னர் சார்ளஸ் இணைவது உலக அளவில் பலரையும் ஈர்க்கும். இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் மீது மன்னர் சார்ளஸ் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சூழல் பாதுகாப்பு குறித்தும் பேசினோம்.” என பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனம் தனி நாடு; அங்கீகரித்தது பிரான்ஸ்



பாலஸ்தீன அரசை பிரான்ஸ் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸின் இந்த முடிவுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளார்.

இது தொடர்பில் எக்ஸ் பதிவில் இமானுவேல் குறிப்பிடுகையில்,

“மத்திய கிழக்கில் அமைதிக்கான வரலாற்று உறுதிப்பாட்டிற்கு இணங்க, பிரான்ஸ் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும்.

வரும் செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு முன் இந்த அறிவிப்பை வெளியிடுவேன்.

காசாவில்போரைமுடிவுக்குக்கொண்டு வந்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதே இன்றைய அவசர முன்னுரிமை. அமைதி சாத்தியம்.

உடனடி போர்நிறுத்தம் செய்து, அனைத்து பிணை கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

காசா மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவை. பாலஸ்தீன அரசை வலுப்படுத்த வேண்டும்.

அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். வேறு வழியில்லை. பிரான்ஸ் மக்கள் மத்திய கிழக்கில் அமைதியை விரும்புகிறார்கள். நாம் அமைதியை அடைவோம்.” என குறிப்பிட்டுள்ளார்.

# பெரும் பட்டினிப் பேரழிவில் காசா; சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை



காசா முழுவதும் பெரும் பட்டினியின் பேரழிவில் இருப்பதாக சர்வதேச அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்தநிலையில் காசாவை சென்றடையும் உதவிகளின் அளவு, அந்த மக்களுக்குத் தேவைப்படுகின்ற தேவையில் ஒரு துளி மாத்திரமே என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

காசாவில் பசி நெருக்கடி இதுவரை இவ்வளவு மோசமாக இருந்ததில்லை என்றும் சர்வதேச அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் மேலும் இரண்டு பேர் இறந்துள்ளனர் என ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் பட்டினியால் ஏற்பட்ட இறப்புக்களின் எண்ணிக்கை 113 ஆக உயர்ந்துள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் - 02
வெள்ளிக்கிழமை 25/07/2025

## கனடாவிலிருந்து யாழ். சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம்சென்றுதங்கியிருந்தகுடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் குருநகர் C2▶



# கறுப்பு ஜூலை இலங்கையின் வரலாற்றில் ஒரு சோகமான அத்தியாயமாக உள்ளது

## கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

கறுப்பு ஜுலை இலங்கையின் வரலாற்றில் ஒரு சோகமாக அத்தியாயமாகவே உள்ளது என கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜுலை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனப் படுகொலை வெடித்தது ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

குடும்பங்கள் உடைந்தன எண்ணற்றோர் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இலங்கை வரலாற்றில் கருப்பு ஜுலை ஒரு சோகமான அத்தியாயமாகவே உள்ளது.

தமிழ் - கனடியர்களின் ஆதரவால் உந்தப்பட்டு 1983 ஆம் ஆண்டு துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடும் 180 இற்கும் மேற்பட்ட தமிழர்களை வரவேற்க கனடா ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை செயல்படுத்தியது மேலும் 2022 ஆம் ஆண்டில் கனடா நாடாளுமன்றம் மே 18 ஆம் தேதியை தமிழ் இனப்படுகொலை C2▶

# 4,000 வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு கனடாவில் நிரந்தர குடியுரிமை அழைப்பு



கனடா அரசு தனது Express Entry வழியாக 4,000 வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு Permanent Residency-க்கான (PR) Invitation to Apply (ITA) வழங்கியுள்ளது.

இந்த சுற்று, மருத்துவம் மற்றும் சமூக சேவைகளில் பணியாற்றும் நிபுணர்களுக்கே தனித்துவமாக நடத்தப்பட்டது.

இந்த தேர்வுக்கான CRS (Comprehensive Ranking System) மதிப்பெண் 475 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இது ஜுன் மாதம் நடந்த அதே பிரிவுக்கான கடந்த சுற்றை விட 29 புள்ளிகள் குறைவாக உள்ளது.

இந்த வாய்ப்பைப் பெற, விண்ணப்பதாரர்கள் தங்கள் Express Entry ப்ரொஃபைலை மார்ச் 13, 2025, மதியம் 1:08-க்கு(UTC) முன் உருவாக்கியிருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த ஆண்டு மட்டும் 49,403 ஐவுயுள வழங்கப்பட்டுள்ளன. ஜுலை 20 வரை Express Entry Pool-ல் 2.56 லட்சம் விண்ணப்பதாரர்கள் உள்ளனர்.

குறைந்த CRS மதிப்பெண் உள்ளவர்களுக்கு சிறந்த வாய்ப்பு:

CRS மதிப்பெண் 500-ஐ விட குறைவாக உள்ளவர்கள், குறிப்பிட்ட தொழில்கள் மூலம் PR பெற Category-based Selection சிறந்த வழியாகும்.

தகுதி பெற குறைந்தது 6 மாத முழுநேர வேலை அனுபவம், அந்த வேலை கனடாவிலோ வெளிநாட்டிலோ இருக்கலாம்.

வேலை, IRCC-வின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்கள் பட்டியலில் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர்தல் தொடர்பில் கடுமையான விதி ஒன்றை அறிமுகம் செய்கிறது கனடா

புலம்பெயர்தல் தொடர்பில் கடுமையான விதி ஒன்றை கனடா அரசு அறிமுகம் செய்கிறது.

கனேடிய குடிமக்கள் மற்றும் கனடாவில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்று வாழ்பவர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை கனடாவுக்கு ஸ்பான்சர் செய்வதற்கான குறைந்தபட்ச வருவாய் வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதுவும், தங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை கனடாவுக்கு ஸ்பான்சர் செய்ய விரும்புபவர்களுக்கு 2024ஆம் ஆண்டில் 47,549 டொலர்கள் குறைந்தபட்ச வருவாய் இருந்திருக்கவேண்டும் என கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டைவிட 3,000 டொலர்கள் அதிகம் ஆகும்.

அத்துடன், இது இரண்டு பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கான



குறைந்தபட்ச வருவாய் வரம்பு மட்டுமே.

ஒரு குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொருத்து இந்த குறைந்தபட்ச வருவாய் வரம்பு அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமின்றி, கடந்த ஆண்டிற்கான குறைந்தபட்ச வருவாய் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை கனடாவுக்கு ஸ்பான்சர் செய்ய போதுமானதாக இருந்தால் மட்டும் போதாது.

அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளும் நீங்கள் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை கனடாவுக்கு ஸ்பான்சர் செய்யும் அளவுக்கு வருவாய் ஈட்டியிருந்திருக்கவேண்டும்.

அதாவது, 2025ஆம் ஆண்டில் நீங்கள் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை ஸ்பான்சர் செய்ய விரும்பினால், 2024ஆம் ஆண்டில் உங்கள் குறைந்தபட்ச வருவாய் 47,549 டொலர்களாக இருந்திருக்கவேண்டும்.

அதேபோல, 2023 மற்றும் 2022ஆம் ஆண்டிலும் உங்கள் வருவாய் அந்த காலகட்டத்தில் ஒரு குடும்பத்தை ஸ்பான்சர் செய்ய எவ்வளவு இருந்திருக்கவேண்டுமோ, அவ்வளவு இருந்திருந்தால் மட்டுமே 2025இல் நீங்கள் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியை ஸ்பான்சர் செய்யமுடியும் என புதிய விதி ஒன்றை கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு அறிமுகம் செய்துள்ளது.

# ஐ.நாவின் உதவி நடவடிக்கைகளை காசாவில் தீவிரப்படுத்த வேண்டும்

## கனடா வலியுறுத்தல்



காசா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் பொதுமக்கள் மற்றும் மனிதநேயம் சார்ந்த உதவி பணியாளர்களை குறிவைத்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு கனடா அரசு கண்டனம் வெளியிட்டுள்ளது.

அத்துடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நடவடிக்கைகள் விரைவாகவும் முழுமையாகவும் மீண்டும் தொடங்கப்படவேண்டும் எனவும் கனடா வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கனடாவின் வெளிவிவகார அமைச்சகம் தனது தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊழியர்கள் மற்றும் மருத்துவமனைகள்,

உலக உணவு திட்டத்தின் உதவி பேரணிகள் மீது இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களை ஏற்க முடியாதவை என்றும், அப்பகுதியில் வாழும் மக்கள் பசி மற்றும் தண்ணீர் இன்மையால் உயிரிழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.“ எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், “காசா பகுதியில் நிலவியுள்ள மனிதாபிமான அவசர நிலை தீவிரமடைந்துள்ளது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையிலான மனிதஉதவி நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது அவசியம்” எனவும் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறான சர்வதேச அழுத்தத்தின் பின்னர், காசா மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் மற்றும் உணவு, சுகாதார சேவைகள் வழங்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**கனடாவிலிருந்து...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைசேர்ந்தபிலிப்புமரிய தாசன் (வயது 63) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

மேற்படி குடும்பஸ்தரின் மனைவியும் பிள்ளைகளும் கனடாவில் வசித்து வரும் நிலையில் அவர் 3 மாதத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் திரும்பி தமது வீட்டில் தங்கி இருந்துள்ளார்.

இந் நிலையில் நேற்று வியாழக்கிழமை அவர் வீட்டு குளியலறையில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர். சடலம் கனடாவுக்கு கொண்டு வரப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

---

**கறுப்பு ஜூலை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு திமாக ஒருமனதாக அறிவித்தது இது உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நீடித்த அர்ப்பணிப்பாகும்.

இந்தக் கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் நினைவு கூர்வதில் கனடா தமிழ்-கனடியர்களுடன் நிற்கிறது.

இந்தப் நாளில் இழந்த உயிர்களை நாங்கள் போற்றுகிறோம் அர்த்தமுள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறலுடன் கூடிய உலகைக் கட்டியெழுப்புவதற்கான எங்கள் பணியை உறுதிப்படுத்துகிறோம். என்று குறிப்பிட்டுள்ளார்.